# இந்திய - தென்கிழக்காசிய தொடர்புகளும் இந்துப் பண்பாடுபற்றிய சில பிரச்சினைகளும்

# - ஒரு வரலாற்றுக் குறிப்பு -

செ. கிருஷ்ணராசா

அறிமுகம்:-

இன்றைய நிலையில் இந்தோசீன, இந்தோனேசிய நாடுகளுள் பெரும்பாலானவை இஸ்லாமியப் பண்பாட்டினைத் தழுவியவையாகவே உள்ளன. இந்நாடுகள் முன்னொரு காலத்தில் இந்துப்பண்பாட்டினையும் தழுவி வளர்ச்சி பெற்றிருந்தமையை தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக புராதன -மத்திய வரலாற்றுக் காலப்பகுதியில் இந் நாடுகளின் பண்பாட்டு வளர்ச்சியானது இந்துப் பண்பாட்டின் அடிப்படைகளைக் கொண்டிருந்தது. இப்பண்பாட்டுச் சூழல் இந்திய பெருநிலப் பரப்பிலிருந்து தென்கிழக்காகவுள்ள தீவக. தீவகக் குறை நிலப்பரப்புக்களுக்கு மேலாக காலத்துக்குக்காலம் பரந்து விரிந்து செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. இச் செல்வாக்கினைச் சுட்டுவதற்குப் பொதுவாக பரந்த இந்தியா, அல்லது அகன்ற இந்தியா என்ற பதங்களை இந்தியப் பண்பாட்டு வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்துவர். இவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்ற பதங்கள் இன்றைய நிலையில் தென்கிழக்காசியப் பண்பாடு பொறுத்து வலு இழந்து கொண்டிருக்கின்ற நிலையையும், தென்கிழக்காசிய வரலாற்றாசிரியர்கள் அச்சொற்பதங்களைக் கையாளுகின்ற நிலையில் இருந்து விலகியுள்ளனர் என்பதனையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. இதுவே தற்காலப் பண்பாட்டு வரலாற்று நோக்கில் தென்கிழக்காசியா மீதான இந்துப் பண்பாட்டுச் செல்வாக்கினைப் பற்றிய சில பிரச்சினைகள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாகியது.

இந்துப் பண்பாட்டுச் செல்வாக்கினைப் பற்றிய பிரச்சினைகளானவை இந்தியாவுக்கு வெளியே அப்பண்பாடு பற்றிக் கொள்ளப்படும் நிலைப்பாடுகளில் இருந்தே தோற்றம் பெற்றவையாகும். இந்துப் பண்பாடானது கிறிஸ்தாப்தத்தின் ஆரம்பத்தில் இருந்தே இந்தியாவுக்கு வெளியே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியிருந்தது எனப் பொதுவாக இந்திய வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வங்காள விரிகுடாவினைக் கடந்த நிலையில் இந்துப் பண்பாடானது மக்களது வாழ்வில் செல்வாக்குப் பெறத் தொடங்கியதன் அடிப்படையைக் கடல் வழிவந்த வர்த்தகப் பாதைகளே உருவாக்கிக் கொடுத்திருந்தன. இந்தோசீனா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பினை இந்தியஉபகண்டம் கொண்டிருந்ததன் அடிப்படையில் இந்துப் பண்பாடும் அத்தொடர்பின் ஊடாக அந்நாடுகளின்

---

☐ *இவர் வரலாற்றுத்துறையில் முதுநிலை விரிவுரையாளர் ஆவர் யாழ்ப்பாணத்தில் கிடைத்த நாணயங்கள் பற்றி ஆய்வு செய்துள்ள இவர் தற்பொழுது இலங்கையின் இந்து கட்டிடசிற்பமரபுகள்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.*

மீது பரவக் காரணமாயிற்று. இத்தகைய இந்துப் பண்பாட்டுச் சூழலை விளக்குவதற்கு இப்பிராந்தியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இந்து சிற்பங்கள், இந்துக் கோவில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களைப் பற்றிய இந்திய மொழிச் சாசனங்கள், இற்றைவரைக்கும் சில பிராந்தியங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட்டுக் கொண்டு வரப்படும் இந்துக் கிரிகை முறைகள் போன்றன சான்றாதாரங்களாக எடுத்துக் கையாளப்படுகின்றன. இன்னொரு முறையில் குறிப்பிடுவதானால் தென்கிழக்காசியா மீதான 'இந்திய மயமாக்கம்' என்ற கருதுகோளினை நிறுவுவதற்குப் பயன்படுத்தப் பட்டு வரும் ஆதாரங்கள் இவை எனலாம்.

## பிரச்சினையின் அடிப்படை:

'இந்திய மயமாக்கம்' (Indianization) என்ற கருத்தினை இந்துப் பண்பாட்டினூடாகவே காணமுனைகின்ற ஒரு பண்பினை இந்தியப் பண்பாட்டு வரலாற்றாசிரியர்களிடத்தில் அவதானிக்க முடிகிறது. பௌத்தப் பாரம்பரியம் ஒன்று வாழ்க்கைமுறையாக ஆசியாவின் பல முனைகளிலும் தாக்கத்தினைச் செலுத்தியிருந்தும் கூட அல்லது இன்றும் இந்திய உபகண்டத்திற்கு வெளியே வாழ்ந்து கொண்டிருந்தும் கூட அதனூடாக 'இந்திய மயமாக்கம்' என்ற கோட்பாட்டினை நிறுவுவதற்கு அவர்கள் மனம் ஒப்பவில்லை. காரணம், இந்தியாவில் தோற்றம் பெற்ற அப்பௌத்தம் இன்றைய நிலையில் அங்கிருந்து மறைந்து சென்றமையேயாகும். இதைவிட இன்னொரு முக்கியமான காரணி பௌத்தமானது இந்தியாவுக்கு வெளியே எங்கெங்கு பரவிச் செல்வாக்குச் செலுத்தியதோ அங்கெல்லாம் சுதேசப் பண்பாட்டு விழுமியங்களை அப்பிராந்திய இயல்புகளுக்கேற்ப வளர்ப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பதாகும். இதனால் அவ்விழுமியங்களினூடாக 'இந்தியமயமாக்கம்' என்பது அவதானிக்கப்படுமானால் அது மிகவும் பலவீனப்பட்டதாகவே அமையும். இந்நிலையில் 'இந்தியமயமாக்கம்' என்ற கருதுகோளானது தென்கிழக்காசிய நாடுகள் மீதாக பார்க்கப்படும் பொழுது இந்துப் பண்பாட்டுத் தடயங்களூடாக கையாளப்படுவதினைக் காணலாம். இதுவே இன்றைய நிலையில் தென்கிழக்காசிய நாடுகள் மீதான இந்துப்பண்பாட்டுச் செல்வாக்குப்பற்றியதான பிரச்சினைகள் அவ் வரலாற்றாசிரியர்களினால் எழுதப்படுவதற்குக் காரணமாயிற்று.

தென்கிழக்காசிய வரலாற்றாசிரியர்கள் மத்தியில் 'இந்தியப் பண்பாட்டு அலைகள்' அல்லது இந்திய மயமாக்கம்' (Cultural waves or Indianization) என்ற கோட்பாடானது இன்று வலுவிழந்து கொண்டிருக்கின்ற நிலையை இங்கு குறிப்பிடவேண்டும். இதற்குரிய ஒரு காரணம் தென்கிழக்காசிய நாடுகளின் தற்காலப் பண்பாடு ஆசியாவுக்கு முற்றிலுமே புறம்பான முஸ்லிம் பண்பாடாக வளர்ச்சி பெற்று வந்துள்ளமையாகும். இன்று பாகிஸ்தானிய அரசு எவ்வாறு சிந்துவெளிப் பண்பாட்டாராய்ச்சியை ஊக்குவிப்பதில்லையோ அதேபோன்றதொரு நிலை தென்கிழக்காசிய வரலாற்று பொறுத்தும் ஏற்படுவதனை அவதானிக்கமுடிகிறது ஆனாலும், இஸ்லாமிய மதத்தின் செல்வாக்கினுள் இன்று காணப்படும் இப்பிராந்தியத்தின் அரசியல் - அதிகார வரம்பின தன்மைகள் யாவும் புராதன இந்து அரசியற் கோட்பாடுகளின் அடியாகவே உருப்பெற்று வளர்ச்சி பெற்றவை என்பதனை மறுப்பதற்கில்லை. தாய்லாந்தின இன்றைய முடியரசு முறையானது ஒரு புறம் ஹினயானத்தின்

முறைகளை பின்பற்றியமைந்திருப்பினும், அரசவைப் பிராமணீயத்தின் தேவையை அதன் சடங்காசார விதிகளுக்காக எதிர்நோக்கி நிற்கின்றது. அது மட்டுமன்றி 'தாய்மொழி எழுதப்படுவதற்கு வழங்கப்படும் வரிவடிவமானது இந்திய வரிவடிவ முறையினின்றும் வளர்ச்சி பெற்றுக்கொண்டமையைச் சான்றுகளுடன் காணலாம் [1].

பொதுவாக இந்தியப் பண்பாட்டாசிரியர்களுடைய விளக்கத்தின்படி இந்தோசீனாவிலும், இந்தோனேசியாவிலும் காணப்பட்டிருந்த புராதன – மத்திய அரசுகள் புராதன இந்திய அரசமைப்பைப் போன்று பிராமணீயப்படுத்தப்பட்ட நிலையில் வளர்ச்சிபெற்று வந்தமையைக் காணலாம். அவை இந்திய அரசியற் கோட்பாடுகளையும், மனுநெறி வளர்த்தெடுத்த அரசபாரம்பரிய நடைமுறைகளையும் பின்பற்றிய நிலையில் இந்துப் பண்பாட்டுச் சூழலை உருவாக்கியிருந்தன. இச் செயன்முறையானது கி. பி 5ம் நூற்றாண்டாரம்பத்துடன் மேலே சொல்லப்பட்ட நாடுகளில் இந்திய சத்திரிய குல முறையில் அமைந்த அரசுகளும், அவற்றின் மீதான பிராமணீயச் செல்வாக்கும், அவற்றினை வளப்படுத்தும் சமய - சமூக நிறுவனங்களும் வளர்ச்சி பெற்று இருந்தன. அவை அப்பிராந்தியத்தின் பல இடங்களில் பிராந்திய அரசுகள் தோற்றம் பெறுவதற்கும், தோற்றம்பெற்ற அவ்வரசுகள் வளர்ச்சியடைவதற்கும் காரணமாகின. ஸ்ரீ விஜயப் பேரரசு வரையாக குப்தருடையதும், பல்லவ - சோழச் செல்வாக்கிற்குட்பட்டுத் திரட்டப்பட்ட இந்துப் பண்பாட்டுக் கலை வெளிப்பாடுகளைக் கொண்டு விளங்குவனவாகக் காணப்பட்டன. இந்நிலையானது தென்கிழக்காசியாவின் பெருமளவிலான பிராந்தியங்களில் கி. பி 15ம் நூற்றாண்டு வரைக்குமாவது செல்வாக்குடன் இருந்திருக்கவேண்டும். இதனைப் பல தொல்லியற் சான்றுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாடு வேரூன்றியதும் அதன் வளர்ச்சியானது (Superstructure) அப்பிரதேச சூழலுக்கேற்ப மாற்றம் பெற்றுக் கொண்டமையிலிருந்தே நாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. இது மாத்திரமன்றி, பிராந்தியசூழல் மாற்றத்தோடு, காலத்துக்குக்காலம் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்டுக்கொண்ட அரசியல் - பண்பாட்டு மாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டமையானது தொடர்ந்தும் அச்சமூகச்சூழல் மாற்றத்தினை வேண்டி நின்றது என்பதனை மறைமுகமாகச் சுட்டிககாட்டியது. இந்திய உபகண்டத்தில் ஏற்பட்டுக் கொண்ட அரசியல் - பண்பாட்டு மாற்றங்கள் அதற்குத் தென்கிழக்கே பிரவாகித்துச் சென்ற தன்மையை பல இந்திய அறிஞர்கள் 'பண்பாட்டு அலைகள்' என வர்ணிப்பதுண்டு. அப்பண்பாட்டு அலைகள் இன்றுவரை தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் மோதிக்கொண்டு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்[2]. பாலித்தீவு போன்றவை இதற்குச் சிறந்த உதாரணமாகவும் கொள்ளப்படுகின்றது.

பாலித்தீவிலே இன்று வரை பல்வேறு வகையான இந்துப் பண்பாட்டின் அம்சங்கள் முழுமையான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. தாய்லாந்து, மலேசியா, ஜாவா ஆகிய நாடுகளில் பொம்மலாட்ட அரங்குகள் பல இயங்கி வருகின்றன. இவ்வரங்குகளில் இந்திய இதிகாசத்தின் நாயகனும், புராதன அரசியற் கோட்பாட்டின் லட்சிய புருஷனுமான இராமனது வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது.

சீதை, ஹனுமார், இராவணன் ஆகியோர் இப்பிராந்தியத்து மக்களை மகிழ்வித்து வரும் ஏனைய இதிகாச பாத்திரங்களாகும். எனவே தென் கிழக்காசிய நாடுகளில் புராதன - மத்திய கால பண்பாட்டம்சங்களை நோக்கும் போது அவை பெருமளவிற்கு இந்திய உபகண்டத்திலிருந்து புறப் பட்ட பண்பாட்டு அலைகளால் பாதிப்புக்குட்பட்டிருந்தன என்பதனைக் காணலாம்.[3] இருந்த போதிலும் தற்காலச்சூழலில் இக்கருத்துக்கள் தொடர்பாக பல வாதப் - பிரதி வாதங்கள் எழுந்துள்ளமையையும் மறுப்ப தற்கில்லை.

## இந்துப் பண்பாட்டு பரவலின் பல வழிகள்:-

இப்போது உள்ள நிலையில் தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாட்டு வரலாற்றினை விளங்கிக் கொள்வதற்கு முன் வைக்கப்படும் பதமான 'இந்திய மயமாக்கம்' என்ற கருத்துத்தொடர் பல வினாக்களை எழுப்பிவிட்டுள்ளது.

1 1. ஏன், எப்போது இந்தியாவானது கிழக்குநோக்கிய தனது செல்வாக் கினைப் பரப்பத் தொடங்கியது?

2. எவ்வகையான மக்கள் வங்காள விரிகுடாவூடாக இந்தியப் பண் பாட்டுப் பரவலினைச் செய்திருந்தனர்?

3. ஒருவேளை அவர்கள் உணவு சேகரிப்பு முயற்சிகளைக் காடுகளில் மேற்கொண்ட அம்மணமான மக்களாக இருந்திருக்கலாமா?

   அல்லது சொந்தமான நாகரிகத்தினையுடையோராய் நிலையான தமது குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்த பல்வேறு வாழ்வு முறைகளுக்குரிய மக்களாக இருந்திருக்கலாமா?

4. தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாட்டு வாழ்வின் இழையங்களில் அவர்கள் எவ்வாறு சரியான வகையில் இந்திய நாகரிகத்தின் மாதிரிகளைப் புகுத்திக் கொண்டனர்?

தவிர்க்க முடியாதபடி மேற்குறிப்பிடப்பட்ட வினாக்களானவை இந்திய மயமாக்கம் தொடர்பான முதலாவது கட்டத்திற்குரிய செயற்பாடுகள் பற்றி ஆராய்பவையாகவுள்ளன. இருந்தும் இப்பிரச்சினை தொடர்பாக எடுத்துக் கூறப்பட்ட முடிவுகள் நிச்சயமாக தற்காலிகமானவையாகவும், பொதுமைப் படுத்தப்பட்டவையாகவும் உள்ளன. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தென்கிழக்காசிய நாடுகளுக்குரியதான எவ்விதமான இலக்கிய மூலங்களோ சாசனங்களோ, வெளிநாட்டு யாத்திரிகர்களது (அப்பிரதேசம் - பற்றிய) யாத்திரைக் குறிப்புக்களோ எந்தவிதமான நிச்சயத் தன்மையுடன் கிறிஸ் தவ சகாப்தத்திற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கும் முற்பட்ட நிலைக்கு எம்மை எடுத்துச் செல்லவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'தென்கிழக்காசியா' என்ற பதமானது மிகவும் பரந்த குடாநாட் டுப் பரப்பினையும், தீவுகளின் பரப்பினையும் உள்ளடக்கிய ஒரு பிராந்தி யத்தினைக் குறிப்பிட்டு நிற்கின்றது. இப் பிரதேசம் உள்ளடக்கியுள்ள குறிப்பிடத்தக்க விசாலத்தினையுடைய சூழற்பரப்பும், மக்கள் இனங்களும், அவை தொடர்ச்சியான வகையில் ஒரே தன்மையான இந்திய மயமாக்கத்

தினையும் அதன் இயக்கத்தினையும் கொண்டிருக்கவும் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிடத்தக்க மக்கள் இனங்களான கமேர் (Khmers), சாமோர் (Chams) ஜாவனியர் (Javanese) என்பவை மிகக்கூடுதலான அளவுக்கு இந்தியப் பண்புகளை ஏற்றுக்கொண்ட அதேநேரத்தில் செலிபிஸ் திவுகளிலுள்ள 'சுலவேசிகள்' (Sulawesi) போன்ற இனங்கள் நேரடியாக இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்குள் உட்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேபோன்று மலேயாத் தீபகற்பத்திலுள்ள (Negroitos) என்ற இனத்தைப் பொறுத்த வரையில் அவர்களை இந்திய நாகரிகத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் என்றோ அல்லது இந்தியமயமாக்கலுக்குட்படுத்தப்பட்டவர்கள் என்றோ ஒரு போதுமே குறிப்பிட்டுச் சொல்ல முடியாது உள்ளது. இப் பின்னணியில் நோக்கும்போது ஒரே சீரான முறையில் இக்காலத்தில் இந்தியப் பண்பாடானது தென்கிழக்காசியாவில் செல்வாக்கினை ஏற்படுத்தி நின்றது என்று கூறுவதற்கில்லை. இதனாற் போலும் 'இந்தியப் பண்பாட்டலைகள், என்று அறிஞர்கள் மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டுச் சென்றனர்.

கிறிஸ்தாப்த உதயத்திற்கு முன் ஓரிரு நூற்றாண்டுகளிலிருந்தே இந்தியாவிற்கும் தெற்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதனை அங்கீகரிக்கும் வகையில் ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன. இருந்தும் இக்காலகட்டத்தில் கிழக்கு நோக்கிய இந்தியக் குடிப்பெயர்ச்சிகள் எவையும், குறிப்பாக இந்திய வம்சாவழிப்படுத்தப்பட்ட மலேயர்கள் போன்று கொள்கை வழிப்பட்டன எவையும் இருந்திருக்க முடியாது என்றே முடிவு கொள்ள வைக்கின்றது. ஆனால் மிகக் கூடுதலான தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தென்கிழக்காசியாவுடனான உறவில் சீனப் பெரும் பரப்பிலிருந்து ஏற்பட்ட மக்கள் இனங்களின் புலப் பெயர்ச்சியைக் காட்டுவனவாகவுள்ளன. இதனை உறுதி செய்து கொள்ளக்கூடிய வகையில் சமூகவியல் - மானிடவியலுக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவை வரலாற்றுக்கு முற்பட்ட கால சீன - தென்கிழக்காசிய நாடுகளின் தொடர்பினை உறுதிப்படுத்துவதற்குப் போதியதாக இருந்தும், இந்தியாவின் புராதன இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் 'சுவர்ணதுவீப' என்று தென்கிழக்காசியப் பிரதேசம் குறிக்கப்படும் மர்மம் என்ன என்பதனை விளங்கிக் கொள்ள முடியாதவாறுள்ளதும் ஆராய்ச்சிக்குரியதாகும். 'சுவர்ணதுவீப' என்று அழைக்கப்படும் பகுதி 'தங்கத்தீவு' என்னும் பொருளில் சுமாத்திராவை அல்லது மலேய் தீபகற்பத்தினைக் குறிப்பிட்டு நிற்கலாம் என ஆய்வாளர் கருதுவர். H.D. சங்காலியா என்பவர் இராமாயணத்தின் காலத்தினை கி.மு. 1000 என வரையறை செய்துள்ளமையும் இங்கு நோக்கவேண்டும்[5]. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் புலப்பெயர்வு தென்கிழக்காசியாவிற்கு இந்திய உபகண்டத்திலிருந்து ஏற்பட்டிருந்திருக்க முடியாது என்றவொரு முடிவு தற்பொழுது வலுவடைந்து வரும் இந்நேரத்தில் இராமாயணம் குறிப்பிடும் சுவர்ணதுவீப பற்றிய பிரச்சினை மேலும் ஆராயத்தக்கதாகும்.

இந்நிலையில் குறிப்பிடதக்க இந்தியப் பண்பாட்டுச் செல்வாக்கானது தென்கிழக்காசியா மீது பேரரசர் அசோகனுக்கு முன்னரேயே உருவாகியிருந்தும் அதனை உறுதிப்படுத்திக் கூடியளவுக்கு தொல்லியல் அல்லது இலக்கிய ஆதாரங்கள் எவையும் கிறிஸ்தாப்தம் வரைக்கும் கிடைக்கப் பெறவில்லை எனக்கூறப்படுகிறது. ஆனால் தற்போது கிடைக்கின்ற சான்றா

தாரங்களைக் கொண்டு பார்க்கும்போது பெருமளவிற்கு கி. மு. முதலாம் நூற்றாண்டிற்கும் கி. பி. 1ம் நூற்றாண்டிற்கும் இடையில் உள்ள காலப்பகுதியில் தென்கிழக்காசியா நோக்கிய 'இந்தியமயமாக்கம்' தொடங்கப் பெற்றது எனலாம். கி. பி. 5ம் நூற்றாண்டினைத் தொடர்ந்து எல்லா வகையான செயல் முறைகளின் அடிப்படையிலும் தென்கிழக்காசிய நாடுகளின் மீதான இந்தியப் பண்பாடு மிகவும் பரந்த அளவில் ஏற்பட்டது. அதுமாத்திரமன்றி, இந்திய மயமாக்கப்பட்ட அரசுகள் பிராந்திய அடிப்படையில் அல்லது மிகக் கூடுதலான சனத்தொகை காணப்பட்ட பகுதிகளில் குறிப்பாக கம்போடியா, வியற்னாம், ஜாவா, மற்றும் பின்தங்கிய பகுதியாகிய கலிமந்தன் (Kalimantan), செலிபிஸ் தீவுகள் ஆகிய பகுதிகளிலும் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்திருந்தமையைக் காண முடிந்தது.

இக் காலவரையறை இங்கு சரியென ஏற்றுக்கொள்ளப்படுமாயின் தென்கிழக்காசியா மீதான இந்திய மயமாக்கத்தின் ஆரம்பம் கிழக்கிந்தியாவில் உள்ள கலிங்கத்திலிருந்து (அசோகனுடைய வெற்றியைத் தொடர்ந்து) அதாவது கி. மு. 261 காலப் பகுதியிலிருந்து ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. மிக அண்மைக் காலத்தில் ஏற்பட்டதைப் போன்றல்லாமல், கி. முற்பட்ட இக்காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து மிகப் பரந்தளவிலான சனத்தொகைப் புலப்பெயர்வு தென்கிழக்காசியா நோக்கி இடம் பெற்றமையை உறுதிப்படுத்தும் தொல்லியற் கூறுகள் எவையும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. இதனால் தென்கிழக்காசியா மீதான 'இந்தியக்குடியேற்றவாதம்' என்ற கருதுகோளானது நீண்ட காலப் பகுதிக்கு ஆய்வாளரினால் உபயோகிக்கக் கூடியதாக இருந்திருக்கவில்லை. இக் கருதுகோளானது தற்போது சர்வதேச ரீதியான கடல் வாணிபத்தின் பின்னணியில் வைத்து ஆராயப்படுவதனையும் காணலாம்.[6]

ஆக்கிமினியப் பேரரசு காலத்திலிருந்து ஆசியாவிலுள்ள பிரதான மையங்கள் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலே வர்த்தக உறவுகள் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தன. சந்தேகத்திற்கு இடமின்றி மாவீரன் முதலாம் அலெக்சாந்தரின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்டளவான கடல்மார்க்கமாக அமைந்த இந்து சமுத்திரத்தின் மீதான வர்த்தக முயற்சிகள் வளர்ச்சி பெற்றிருந்தன. குறிப்பாக பேர்சியக் குடாவிற்கும் இந்து நதியின் முகத்துவாரப் பகுதிக்குமிடையே இவ் வர்த்தக முயற்சிகள் நன்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தன.[7] கி. மு. முதலாம் நூற்றாண்டில் கீழைத்தேயத்தை நோக்கிய பிரதான ஐரோப்பிய, தரைவழிவந்த வர்த்தக மார்க்கமானது சேர்லுமொரு கடல்வழிவந்த இந்து சமுத்திர வர்த்தக மார்க்கம் ஒன்றினால் அதிகரிக்கப்பட்டது. இம் மேலதிக வர்த்தக மார்க்கமானது பருவகால வியாபாரக் காற்றின் உதவியுடனேயே விஸ்தரித்துக் கொள்ளப்பட்டது. கிப்பலஸ் என்ற கிரேக்க மாலுமி ஒருவனின் இக் கண்டுபிடிப்புடன் கீழைத்தேயத்துக்கான ஐரோப்பிய, வர்த்தகத் தொடர்புகள் புதியதோர் பரிணாமத்தினைப் பெற்றுக்கொண்டது. பருவக்காற்றின் உதவியுடன் இந்து சமுத்திர வர்த்தகத் துறையானது மிகவும் பிரமாண்டமானதோர் செயற்பாட்டினைப் பெற்றுக் கொண்டது. ரோமப் பேரரசின் நுகர்வுச் சந்தையமைப்பானது இந்திய கரையோர வியாபார மையங்களிலிருந்து

வேண்டிய ஆடம்பரப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் புத்தூக்கம் பெற்றுக் கொண்டமைக்கு இப் புதிய கடல்மார்க்கமே அடிப்படையாக அமைந்தது. மத்திய தரைப் பிராந்தியத்திலிருந்து சீனப் பட்டுப் புடவைக்கும் இந்திய வாசனைத் திரவியங்கள் - மருந்து மூலிகைகள் ஆகியவற்றுக்குமாக ஏற்பட்ட தேவையானது இந்தியரை முதன் முதலாக ஒன்றில் தென்கிழக் காசிய நாடுகளினூடே கொண்டு சென்றதா அல்லது மேற்கு நாடுகளினூடே கொண்டு சென்றதா என்பதனை ஆராய்வது பிரச்சினையாகவுள்ளது. இது தீர்க்கவும் முடியாதுள்ளது. ஆனால் தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள தீவக் குறைகள் அல்லாத நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் எச்சங்களானவை மேற்கு நாட்டுக்குரியவையாக காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. அவை பெருமளவுக்கு மத்தியதரை - மத்தியாசியா (ஈரான்) பிரதேசங்களுக்குரியனவாகவுள்ளன. எதிர்க்கணிய முறைப்படி அவை சந்தேகத்திற்கிடமின்றி இந்திய மயப்படுத்தப்பட்ட எச்சங்களுக்கு முன்னோடிகளாக அமையும் எனவும் வற்புறுத்தப்படுகின்றன.[8]

மத்திய தாய்லாந்தில் உள்ள Pong Tuk என்னுமிடத்திலிருந்து செம்பினால் செய்யப்பட்ட விளக்கு ஒன்றும், தெற்கு வியட்னாமிலிருந்து ரோமப் பதக்கம் ஒன்றுமாக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் தென்கிழக்காசியாவானது முதலில் ஐரோப்பாவை நோக்கிய கடல்வழி வந்த வர்த்தக மார்க்கத்திற்கு உட்பட்டிருந்தது என்பதனை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. கி. பி. 152 ஆம் ஆண்டுக்குரிய அந்த ரோமப்பதக்கமானது 'மக் கொங்' கழிமுகப் பரப்பினுள் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொலமியினுடைய 'புவியியல்' என்ற நூலில் இப்பிரதேசம் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. OC - EO என்று குறிப்பிடப்பட்ட ஒரு துறைமுகமானது கிறிஸ்தாப்த காலத்தில் கிழக்கு - மேற்கு கடல்மார்க்கமாக அமைந்த வர்த்தகத்தில் முக்கிய பங்கு எடுத்திருந்தது என தொலமியினுடைய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[9] இத் துறைமுகத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட கண்ணாடியினாலும் உலோகத்தினாலுமான மணிகள், முத்திரைகள் என்பன போன்ற பொருட்கள் தென் இந்தியாவின் கிழக்குக் கரையில் பாண்டிச்சேரிக்கண்மையில் அரிக்கமேடு என்ற வர்த்தகத் துறைமுக மையத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பொருட்களை ஒத்தனவாக உள்ளன. அரிக்கமேடு கூட ரோமானிய வர்த்தகர்களால் உபயோகிக்கப்பட்ட ஒரு துறைமுகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.[10]

எனவே இந்தியாவிலும் தென்கிழக்காசிய நாடுகளிலுமிருந்தும் கண்டுபிடிக்கப்பட்ட இடச் சார்பான தொல்லியல் எச்சங்கள் எமக்கு உணர்த்துவதென்னவெனில் இந்தியர்கள் வங்காள விரிகுடாலூடாக கடற் பிரயாணம் செய்திருந்தனர் என்பதும் அதன் அடிப்படையில் தென்கிழக்காசிய நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதுமாகும். அதாவது ஒன்றை மட்டும் இங்கு திட்டவட்டமாகக் குறிப்பிட்டுக்கொள்ள முடிவது என்னவெனில் இந்தியாவிலிருந்து கிழக்கு நோக்கிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த, தென்கிழக்காசிய நாடுகளூடாக - ஊடறுத்துச் சென்ற, வர்த்தக மார்க்கங்களை இந்தியர்கள் பெருமளவுக்குத் தமது

தேவைக்காகப் பயன்படுத்தியிருந்தனர் என்பதாகும். இவ்வடிப்படையிலேயே இந்தியர்கள் தென்கிழக்காசிய நாடுகளின் மீது நின்று நிலைக்கக்கூடிய அளவில் தமது பண்பாட்டுச் செல்வாக்கினை - பண்பாட்டு முத்திரைகளைப் பதித்துச் சென்றனர் எனலாம்.

தென்கிழக்காசிய நாடுகளினூடாக இந்தியர்கள் வியாபார முயற்சிகளிலும் பிரயாண முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்த காலகட்டங்களில் அப்பிராந்தியங்களில் வாழ்ந்த சுதேசமக்களை இந்திய மயப்படுத்தினார்கள் என்றோ அல்லது தாம் சந்தித்த மக்களை நாகரிகப்படுத்தினார்கள் என்றோ குறிப்பிடலாம். இத்தகைய ஒரு செயல்முறைக்கு அவர்கள் பல்வேறு வழிவகைகளைக் கையாண்டிருக்க வேண்டும் எனவும், அதனால் இப் பிராந்தியத்தில் ஒரு சீரான அல்லது ஒரே தன்மையுடையதான இந்தியப் பண்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர். பொதுவாக தென்கிழக்காசிய நாடுகளில் பண்பாட்டு மாற்றங்கள் திடுதிப்பென்று ஏற்படுவதால், ஒரே சீரான பண்பாட்டு நடைமுறையின் வெளிப்பாடு இப் பிராந்தியம் முழுவதிலுமே ஏற்பட்டிருக்கும் எனக் குறிப்பிடுவதில் அர்த்தமொன்றுமே இருக்காது.

சில குறிப்பிட்ட பிராந்தியங்களில் இந்திய வணிக கணங்களினுடைய (Guilds) குடியேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எவ்வாறு பிற்பட்ட காலத்தில் பினாங், சிங்கப்பூர் போன்ற இடங்களில் மேலைத்தேய வர்த்தகர்களது குடியேற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டனவோ அவ்வாறே இந்திய வர்த்தகர்களது குடியேற்றமும் இக்குறிக்கப்பட்ட பிராந்தியங்களில் ஏற்பட்டுக் கொண்டன எனலாம். இருந்தும் இவ்வாறான புராதன வர்த்தகக் குடியேற்றங்கள் அங்கு ஏற்பட்டுக் கொண்டதற்கான நேரடியான சான்றுகள் கிடைக்காவிடினும் இவ்வகையான குடியிருப்புக்கள் ஏற்பட்டிருந்தமையைக் காட்டும் சில சாசனச் சான்றுகள் கிடைத்துள்ளன.

மேற்குச் சுமாத்திராவில் பாரோஸ் என்ற இடத்திலும் தகுவா-பா என்ற இடத்திலும் கிடைத்த 'மணிக்கிராமத்தார்' என்ற வணிக கணத்தினரது கல்வெட்டும் மேற்குறிப்பிட்ட கருத்தினை உறுதிப்படுத்தி நிற்கின்றன. தகுவா-பாவில் கிடைத்த பல்லவர் காலத்துக்குரிய வடமொழிக் கல்வெட்டானது அங்கு அமைந்திருந்த ஒரு விஷ்ணு கோவிலுக்குரிய நிலத்தானத்தினைக் குறிப்பிட்டு நிற்கிறது[11]. சந்தேகத்திற்கு இடமின்றி இவ்வகையான உதாரணமானது இந்திய முறையிலமைந்த நகர-மத வாழ்க்கைகளை அப் பிராந்தியத்தைச் சேர்ந்த சுதேச மக்கள் அனுபவித்திருந்தனர் எனக் குறிப்பிடலாம்.

'இந்தியமயமாக்கம்' தொடர்பான நடைமுறையை தென்கிழக்காசியப் பிரதேசங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த சுதேசிய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டமையைக் காணலாம், இவ் ஆட்சியாளர்கள் ஒன்றில் தம்முடைய நேரடியான இந்தியத் தொடர்பின் அடிப்படையிலோ அல்லது இவ் ஆட்சியாளர்களது ஆட்சிப் பிரதேசத்திற்குள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்களின் உதவியுடனோ அவர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இம் முயற்சி

என்று இங்கு குறிப்பிடப்படுவது இந்திய அரசியல் முறைகளையும், கோட்பாடுகளையும் பெற்றுக்கொண்டு தத்தமது அரசியல் சமூக - வாழ்க்கை முறைகளை அங்கு உருவாக்கியமை பற்றியேயாகும். எடுத்துக்காட்டாக மிகவும் அண்மைக்காலத்தில் 19 ம் நூற்றாண்டில் ஜப்பானும் தாய்லாந்தும் மேலைத்தேய மயமாக்கத்தை தத்தமது பிரதேசங்களில் தாமாகவே புகுத்திக்கொண்டமையைக் குறிப்பிடலாம். இந்நிலையில் மேலைத்தேயத்திற்குரிய கலை, தத்துவம், இலக்கியம் என்பன அங்கு பொருளற்றவையாயின: பதிலாக விஞ்ஞானம் - தொழிநுட்பம் - அரசியல் முறை என்பனவே கவனத்தினை ஈர்த்துக்கொண்ட துறைகளாயின. அவ்வாறான ஒரு தேவை இவ்விரு நாடுகளுக்கும் இக்காலகட்டத்தில் ஏற்பட்டிருக்குமாயின் குறிப்பிட்ட அக் காலப் பகுதியில் திட்டவட்டமாக, இந்திய மதப் பெரும் பரப்பினால் சூழப்பட்டிருந்த புராதன அரசியற் கோட்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் தென்கிழக்காசிய நாடுகளில் உத்தியோக பூர்வமான முறையில் இந்தியப் பிராமணிய முகவர் நிறுவனங்களினூடாக அறிமுகப்படுத்தப்பட்டு, அதனைப் பிரதிபலித்து நிற்கக்கூடிய ஒருசமூகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறேதும் இருக்காது. சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின், இன்று இம் மூன்றாம் உலக நாடுகளில் மேலைத்தேயத்தினைச் சேர்ந்த ராஜதந்திரிகளை அல்லது தத்துவ வாதிகளை - அறிவியலாளர்களை சேவைக்கமர்த்தி அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடுவது போன்று அக்காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளில் பிராமணிய முகவர் நிலையங்கள் அச் சேவைகளைச் சுதேச மக்களுக்கு வழங்கியிருந்தன எனலாம்.

மூன்றாவது வகையான இந்திய மயமாக்கல் நடைமுறையின் செயற்பாடானது 'வெற்றி கொள்வோர்' (Adventurers) என்ற முறையில் இடம் பெற்றமையைக் காணலாம். சீன வரலாற்று நூல்களிலிருந்தும் சீன யாத்திரிகர்களது குறிப்புக்களிலிருந்தும் திரட்டப்பட்ட கருத்துக்கள் தென்கிழக்காசிய நாடுகளுடனும் தொடர்பான இந் நடைமுறையை உறுதிப்படுத்தியுள்ளன. இந்தியர்கள் செல்வங்களையும் வளங்களையும் (Fame and Fortune) வீரத்துடன் நாடி, கடல் கடந்து சென்று கண்டு அடைந்து கொண்ட நிகழ்வினை இச்செயல்முறை குறிப்பிட்டு நிற்கின்றது. இச்செயல் முறையின் கீழ் இந்தியர்களால் தென்கிழக்காசியப் பிரதேசங்களில் பேரரசுகள் அமைக்கப்பட்டு இந்திய மயமாக்கம் மேற்கொள்ளப்பட்டமையைக் காணலாம். 19 ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் ராஜா சேர் ஜேம்ஸ் புறூக் என்பவர் சரவாக்கில் ஏற்படுத்தியதைப் போன்று, இந்திய வெற்றி கொள்வோரது இயக்கம் புராதன - மத்திய காலத் தென்கிழக்காசியப் பிரதேசங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்க முடியாது.

தென்கிழக்காசியாவில் இந்திய அரசமைப்பினையொத்த ஆட்சி முறைகள் உருவாக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தும் சீன இலக்கிய மூலங்களை சாசன மூலங்கள் மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. கௌடிண்யன் என்ற பிராமணன் தொடர்பாக அங்கு நிலவும் கதையும் கருத்தும் அத்தகையதாகும். அப் பிராமணன் இந்தோ - சீனாவிலுள்ள ஃபூனான் (Funan)

என்ற பிரதேசத்தில் பெருந்தொகையான சனக்குழுக்களுடன் சென்று அங்கு ஃபூனான் இளவரசியைத் திருமணம் புரிந்ததன் அடிப்படையில் ஒரு பேரரசினை ஸ்தாபித்தான் என்ற கருத்து பரவலாக நிலவி வருகின்றது[12] ஒருவேளை பிற்பட்ட காலத்தில் இக் கதையானது பெருமளவுக்கு தென்கிழக்காசியாவில் அரசுகளின் தோற்றத்தைப் பிராமணியப்படுத்திக் காட்டுவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. நாகமன்னனுடைய மகளான 'நாகிசோமா' என்பவளை கௌடிண்யன் என்ற பிராமணன் திருமணம் செய்து கொண்டமையைத் தொடர்ந்தே ஃபூனான் அரசு (Funan State) தோற்றம் பெற்றுக் கொண்டது என நம்பப்படுகிறது. இந் நம்பிக்கையை வலுப்படுத்தும் காரணிகளாக கமோர் அரசர்கள் (Khamer) தமது கலை வெளிப்பாட்டுச் சின்னங்களில் குறிப்பாக புடைப்புச் சிற்ப மரபுகளில் நாகராச வடிவங்களைக் கொண்டு இக் கதையை வெளிப்படுத்தியமையிலிருந்தும், தென்னிந்தியாவில் பல்லவ வம்சத்தின் தோற்றத்துடன் ஃபூனான் அரசின் தோற்றம் தொடர்பாகக் குறிப்பிடப்படும் ஐதீகமும் ஒன்றாக இங்கு அமைவதும் குறிப்பிடத்தக்கனவாகும். இருந்தும் தென்கிழக்காசியாவின் வரலாற்றுத் தொடக்கத்தில் நிலவியிருந்த பிராமண - நாக வம்சங்களின் கலப்பானது எந்தளவிற்கு இந்திய மயமாக்கலை உத்தியோகப் பற்றுள்ள மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தது என்பது தொடர்பாக சிறு ஐயமும் ஏற்பட்டுள்ளது ஏனென்றால் இங்கிருந்து முற்காலகட்டத்துக்குரியனவாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் ஆதாரங்களுள் புத்தருடையதும் திருமாலினுடையதுமான சிற்பங்களே அதிகமாகக் காணப்பட்டிருந்தன என்பதனாலாகும். அவை அப்பிராந்தியத்திற்குரிய தனிப் பண்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்டமையும், அதன் அடியாக சுதேச கலைமரபொன்றுக்கான பின்னணி காணப்பட்டிருந்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மயப்படுத்தப்பட்ட தென்னாசியாவின் பண்பாட்டுப் பரிமாணத்தின் தனி முதன்மைக்கு சுதேச கலைமரபுகளின் எழுச்சி அல்லது மறுமலர்ச்சியே காரணம் என்று கூறமுடியாது. ஏனெனில் இந்திய மயமாக்கமானது ஒருமுறை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அது இருக்க வேண்டிய இடத்திற்குத் தானாக வரவில்லை. அதற்குரிய ஒரு சூழ்நிலையை பன்முனைப்படுத்தப்பட்ட வர்த்தக வலைப்பின்னற் பாதைகளே உருவாக்கிக் கொடுத்தன என்றால் அது மிகையாகாது இந்தியாவுக்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையே வர்த்தக அடிப்படையிலான கடற்பாதைகள் உருவாக்கப்பட்டதன் பின்னரேயே வங்காள விரிகுடாவினைக் கடந்து இந்தியா தனது பண்பாட்டுப் பரிமாற்றத்தினை நடாத்தத் தொடங்கியிருந்தது. இந் நிலையிலேயே வட இந்தியாவில் குப்தர் காலத்தில் உருவாக்கப்பட்ட பண்பாட்டு மறுமலர்ச்சியும் பால, சேன வம்சங்களின் காலத்தில் வங்காளத்தில் உருவாக்கப்பட்ட மத - தத்துவக் கருத்துக்களும் தென்கிழக்காசிய நாடுகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

சைலேந்திர வம்சத்தின் கலை மரபுகளானவை கி. பி. 8 ஆம் 9 ஆம் நூற்றாண்டுகளில் மத்திய ஜாவாவில் பெரும் செல்வாக்கினைப் பெற்றிருந்தன. அது மட்டுமன்றி கி. பி. 13ஆம் நூற்றாண்டளவில் பொரபொதூர்

கட்டிட மரபுகள், ஸ்ரீவிஜயப் பேரரசின் கலை மரபுகள் என்பவை யாவும் இந்தியாவிலிருந்து மகாயான மரபுகளின் அடியாகப் பெற்றுக் கொள்ளப் பட்ட செல்வாக்கு நிலைகளைக் காட்டி நிற்கின்றன. வங்காளத்தில் ஆட்சி செய்த பால வம்சத்தின் கலைமரபுகளைக்கூட தென்கிழக்காசிய நாடுகளில் காணமுடிகிறது. கி. பி. 7ஆம் 8ஆம் நூற்றாண்டுக்குரியதான வங்காளத் திலுள்ள பெரிய கோவிலான Paharpur ஐ ஒத்து Borabodur, மத்திய ஜாவாவிலுள்ள Prambanan, கம்போடியாவிலுள்ள ஆங்கோர்வார்ட், பர்மாவிலுள்ள ஆனந்தா கோவில் என்பன அமைக்கப்பட்டமையைக் காணலாம்.[13] தொல்லியல் ஆய்வின் முடிவுகள் இக் கோவில்களின் அடித்தளத் திட்டங்கள் (Ground plan) யாவும் ஒரே மாதிரியைக் கொண்டிருக்கின்றன என்பதனைக் காட்டுகின்றன. எனவே இந்திய மயமாக்கத்தின் செயற் பாடுகளில், சுதேசக் கலைகளின் எழுச்சியானது சர்வதேச ரீதியில் நிகழ்ந்த இயக்கத்தின் அடிப்படையில் சேர்ந்து இயங்கியமையே தென்கிழக்காசிய நாடுகளின் இந்துப்பண்பாட்டின் செல்வாக்கு ஏற்பட்டிருக்கக் காரண மாயிற்று என முடிவு கொள்ளலாம். இப் பின்னணியில் இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும், பின்னர் இந்தியாவுக்கும் மேலைத்தேயங் களுக்கும் அதன் பின்னர் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் மேலைத்தேயங் களுக்கிடையிலுமான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டமையும் அதன் பின்னணியின் தனித்துவமான பண்பாட்டு வெளிப்பாடுகளையும் அவற்றின் சிரற்ற பிராந்திய சூழ்நிலைகளையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. இந்நிலையே - தென்கிழக்காசிய பண்பாடுபற்றியும், அதன் சமூகச் சூழல் பற்றியும் தற்காலத்தில் ஆய்வு செய்வோர் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாகும். அதுவே தென்கிழக்காசியாவின் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியம் தொடர்பாக கற்போருக்கும் உதவும் அறிமுகமாகும்.

**அடிக்குறிப்புகள் :**

1. Alastair Lamb; Indian Influence in Ancient South East Asia; A Cultural History of India, (BD) by A. L. Basham., P. 442.
2. Ibid.
3. **Encylopiedia Britania** ; 'The Cultural Setting of South East Asian Arts', VOL. NO. 17. P. 231.
4. Ibid.
5. **Sankalia, H. D**; 'Archaeology and the Ramayana or Dating the Ramayana', Puratattva, Bulletin of the Indian Archaeological Society, 1967 - 68, P. 3.
6. Alastair Lamb; OPP. Cited. P. 444.